22.08.2025

அ.வ.எண். 216/2021

வா.சா.1 - பூங்கொடி , க/பெ. தங்கவேல்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 22.08.2025 is accordance with the provision of Act X of 3331

**<u>1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வா.சா.ஆ.3 ஆவணம் மூலமாக வழக்கு சொத்தை எனது அக்கா கோமதியும், எனது கணவர் தங்கவேலும் சேர்ந்து கிரயம் பெற்றனர். கிரயம் பெறும்போது என்னென்ன ஆவணங்களை பார்த்தனர் என்றும், என்ன சர்வே எண்ணுக்கு உட்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த போது வழக்கு ஆவணங்களை பார்த்தேன், அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வா.சா.ஆ.3 ஆவணத்தில் புல எண்.233/1B, 1C, 1D குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. வழக்குரையில் புல எண். 233/1E குறிப்பிட்டுள்ளேன் என்றும் அது எதன் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் 1954 ம் ஆண்டில் முத்துக்கவுண்டன் மற்றும் பழனிச்சாமி கவுண்டர் புல எண்.233/1A, 1B, 1C, 1D கிரயம் வாங்கினார். புல எண்.233/1E என்பது தடத்திற்கான தனி காலை ஆகும். 1954 ம் ஆண்டில் கிரயம் பெறும்போதே மாமூல் வழித்தடம் என குறிப்பிட்டு கிரயம் பெற்றுள்ளனர். 1954 ஆண்டு கிரய பத்திரமே இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரம் அனைத்து பத்திரத்திற்குமே அடிப்படை என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் 233/1 என பொதுவாக உள்ளதா அல்லது உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் தெரியாது.

3. வா.சா.ஆ.1 பத்திரத்தில் எங்கு உள்ளது என்றும், எந்த திசையில் உள்ளது பற்றி தெரிந்துகொண்டேனா என்றால் ஆமாம். முத்துக்கவுண்டனுக்கு வந்த சொத்துக்களை தான் நாங்கள் உரிமை கோருகிறோம். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை மூலமாக வந்த சொத்துக்களை முத்துக்கவுண்டன் வா.சா.ஆ.2 கிரய பத்திரம் மூலமாக தேவராஜிற்கு எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி தேவராஜிடம் இருந்து

எனது கணவரும், எனது சகோதரியும் சொத்துக்களை கிரயம் பெற்றனர். வா.சா.ஆ.2 கிரய பத்திரத்தில் புல எண்.233/1B, 1D மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 கிரய ஆவணத்தில் புல எண்.233/1B, 1C, 1D குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தேவராஜிற்கு பாத்தியப்படாத புல எண்.233/1C, நிலத்தையும் சேர்த்து வா.சா.ஆ.3 கிரய பத்திரத்தில் ஏற்படுத்தி கொண்டு வழக்கு தாக்கல் செய்யும்போது புல எண்.233/1 E நிலத்தையும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. முத்துக்கவுண்டனிடம் இருந்து, தேவராஜிற்கு வந்து அதன் பின்னிட்டு எனது கணவர் மற்றும் என் சகோதரி கிரயம் பெற்றனர்.

4. வா.சா.ஆ.2 மற்றும் 3 கிரய பத்திரத்தில் மாமூல் வழித்தடம் பாத்தியம் என குறிப்பிடப்பட்டுள்ளதை தவிர புல எண்.233/1E காலையில் உள்ள தடம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மாமூல் வழித்தடம் என்பது வேறு காலையில் உள்ளது என்றும், புல எண்.233/1E தடம் இல்லை என்றால் தடம் உள்ளது. வரைபடத்தில் உள்ளது. எதன் அடிப்படையில் புல எண்.233/1 E தடம் கோருகிறேன் என்றால் மாமூல் தடம் என்று உள்ளது.

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur